பிரிவுகள் 7 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1

திரு. இரா. கருப்பையா : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :—

''பிரிவு 1-ல் (3)-வது உபபிரிவில் இரண்டாவது வரியில் உள்ள 'ஐம்பது பேருக்குக் குறையாமல்' என்ற வரியை நீக்கி 'பத்து பேரும் அதற்கு மேலும்' என்ற வார்த்தையைச் சேர்க்கவும்'.

திருத்தம் வழிமொழியப் பெற்றது.

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : உறுப்பினர் திரு. கருப்பையா அவர்களுடைய திருத்தத்தை ஆதரித்து, என்னுடைய திருத்தத்தை நான் மொழியவில்லை.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வி யுற்றது.

பிரிவு 1 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

''1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு தொழில் நிறுவனங்கள் (தொழிலாளர்களுக்கு நிலையான தகுதியை அளித்தல்) சட்ட முன்வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1981) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

[பிற்பகல் 12-40]

10. அறிவிப்பு.

அ. சம்பளம் வழங்கல் (இண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு, 1981 (ஆ. இ).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு சம்பளம் வழங்கல் (இரண்டாவது திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 55/1981) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்கள்.